**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.178/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on04.09.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : தமிழரசி Husband Name : சுப்ரமணியன்

துவக்க நேரம்: 03.40 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1. இவ்வழக்கை எனது கணவர் சுப்ரமணியன் தான் முதலில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்னிட்டு இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளால் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், ஆவணங்களின் அடிப்படையிலும், எனது உறவினர்கள் கூறியதன் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 1975-ல் இந்த வழக்கு தாக்கல் செய்தபொழுது எனக்கு என்ன வயது என்றால் 3 வயது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டபொழுது எனது கணவருக்கு 22 வயது இருக்கும் என்றால் சரியல்ல, 19 அல்லது 20 வயதுதான் இருக்கும். இவ்வழக்கில் எனது கணவர் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின்16, 17 பிரதிவாதிகள் இருவரும் பொன்னுசாமி கவுண்டர் மகனான தங்கராஜ் என்பவருக்கும், பாப்புவிற்கும் பிறந்த மகன்கள் என்றால் தங்கராஜிவிற்கும், பாப்பு (எ) தெய்வகுஞ்சரம் என்பவருக்கும் பிறந்தவர்கள் என்பது சரி, ஆனால் தங்கராஜிவின் தந்தை பெயர் எனக்கு தெரியாது.

3. மேற்படி தங்கராஜிவின் முதல் மனைவி பாப்பு (எ) தெய்வகுஞ்சரம் இறந்த பின்னிட்டுதான் 1-ஆம் பிரதிவாதியான செல்வலட்சுமியை தங்கராஜ் திருமணம் செய்து கொண்டார் என்றால் அவ்வாறு திருமணம் செய்து கொண்டதாகத்தான் நான் கேள்விப்பட்டேன். தாவாவின் சொத்து விவரத்தில் 2 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. தாவா முதல் அயிட்ட சொத்தில் 2 தார்சு வீடுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் எந்த சர்வே எண்களில் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அதன் நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த 2 வீடுகளும் தற்பொழுது வரை இருந்து வருகிறது. தாவாவின் 2-வது பரிகாரத்தில் பணம் மற்றும் நகைகள் சம்மந்தமாகவும் பங்கு கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்து விவரத்தில் பணம் மற்றும் நகைகள் பற்றிய விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, முதலில் தாக்கல் செய்த தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் தாக்கல் செய்த தாவாவிலேயே மேற்படி பணம் மற்றும் நகைகள் குறித்த விவரங்கள் சி, டி அட்டவணை சொத்துக்களாக காண்பிக்கப்பட்டு பின்னர் கோடிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சி, டி அட்டவணை சொத்துக்கள் கோடிட்டு அடிக்கப்பட்டுவிட்டதால்தான் அதன் பின்னர் தாக்கல் செய்த திருத்தப்பட்ட தாவாவில் மேற்படி சொத்து விவரங்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. 5-ஆம் பிரதிவாதி செல்லமுத்தியம்மாள் என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தந்தை வழி பாட்டி என்றால் சரிதான், ஆனால் 1-ஆம் வாதியான எனது கணவருக்கும் அவர் தந்தைவழி பாட்டிதான். 6-ஆம் பிரதிவாதி மீனாட்சியம்மாள் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாயார் என்றால் சரிதான். சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும், 6-ஆம் பிரதிவாதிக்கும் பிறந்த மக்கள்தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அதேபோல் சீனன் (எ) அருணாச்சல

கவுண்டருக்கும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும் பிறந்தவர்தான் என் கணவர் சுப்ரமணியன்.

6. 8-ஆம் பிரதிவாதியின் பழனிமுத்துவின் தந்தை 9-ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். முத்துக்குமாரசாமியின் முதல் மனைவிதான் 5-ஆம் பிரதிவாதி செல்லமுத்தியம்மாள் என்றால் சரிதான். 9-ஆம் பிரதிவாதி முத்துக்குமாரசாமிக்கும், 15-ஆம் பிரதிவாதி செல்லம்மாளுக்கும் பிறந்தவர்தான் 8-ஆம் பிரதிவாதி பழனிமுத்து என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சீனன் (எ) அருணாச்சலகவுண்டருக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, எனது கணவரின் தந்தைக்கும், எனது கணவரின் பாட்டனாருக்கும் இடையே கடந்த 1945-ல் சேலம் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின் தீர்ப்பின்மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று கூறியுள்ளோம். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்கண்ட சங்கதியை தாவாவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன வழக்கின் இறுதிநிலை தீர்ப்பின்படி A பாகம் முத்துக்குமாரசாமிக்கும், B பாகம் சீனன் (எ) அருணாச்சலகவுண்டருக்கும், C பாகம் பழனிமுத்து, வள்ளியம்மைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு சீனன் (எ) அருணாச்சலகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட B பாக சொத்துக்கள்தான் இந்த வழக்கின் சொத்துக்கள் என்றால் சரிதான்.

7. பழனிமுத்து, வள்ளியம்மை என்பவர்கள் முத்துகுமாரசாமி பெற்றோர்கள் என்றால் சரிதான். மேற்படி 1945-ம் ஆண்டு வழக்கில் முத்துகுமாரசாமி ஒதுக்கப்பட்ட A பாக சொத்துக்கள் மற்றும் அவரது பெற்றோர்களுக்கு ஒதுக்கப்பட்ட C பாக சொத்துக்களை தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த தாவாவில் B அயிட்ட சொத்துக்களில் 4, 6, 7, 8,9 மற்றும் 10 ஆகிய இனங்களில் பேர்பாதிக்கு மட்டுமே இந்த

தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவிற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட சொத்துக்களில் வாதி, 8-ம் பிரதிவாதிக்கு சேரவேண்டியது என தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் அவ்வாறு 8-ம் பிரதிவாதிக்கு சேரவேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 8-ம் பிரதிவாதியின் தந்தை முத்துகுமாராசாமி அவருக்கு கொடுத்திருக்கலாம்.

8. பட்டா எண்.156, ச.எண்.139/2-ல் ஏக்.3.98 செண்ட் நிலம் 5-ம் பிரதிவாதி செல்லமுத்தியம்மாள் பெயரிலுள்ள தனிப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்து 5-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்ற விவரம் தெரிந்திருந்தும் தற்போது வழக்கிற்காக அது பற்றி தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, குடும்ப வருமானத்திலிருந்துதான் 5-ம் பிரதிவாதி அவரது சொத்துக்களை வாங்கியிருக்கலாம். மேற்படி சொத்து 5-ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அவருக்கு முழுமையாக உரிமையானது என்றாலும் தாவாவில் மேற்படி சொத்தில் அரை பாகம் மட்டுமே உரிமை என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

9. தாவாவில் B அட்டவணை சொத்தில் 15 (c)-வது இனத்தில் ச.எண்.141/11-ல் 9 செண்ட் நிலமும், அதில் ஒரு பயன்படுத்தப்படாத கிணறு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16-வது இனத்தில் ச.எண்.132/3-ல் 1 ஏக்கர் 8 செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 18.07.2025-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்டுள்ள தாவாவில் 15 (c) -வது இனத்தில் ச.எண்.141/11-ல் உள்ள சொத்து காண்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ச.எண்.132/3-ல் உள்ள சொத்தானது 1 ஏக் 8 செண்ட் என்றும், மற்றொரு இடத்தில் 1 ஏக் 3 செண்ட் என்றும் வெவ்வேறாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. தாவா B அட்டவணை சொத்தில் 2-வது இனத்தில் ச.எண்.141/1-ல் உள்ள மின்மோட்டார் எத்தனை HP என திருத்தப்பட்ட தாவாவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் கடந்த 1992, ஆவணி 26-ம் தேதி நடைபெற்றது. 1-ம் வாதியான எனது கணவர், சீனன் (எ) அருணாச்சலகவுண்டரின் வாரிசு என்பதற்கான வாரிசு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவரின் பிறப்பு சான்றிதழ் மற்றும் எனது மாமனாரின் இறப்புச் சான்று ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர், சீனன் (எ) அருணாச்சலகவுண்டரின் வாரிசு இல்லை என்பதால்தான் வாரிசு சான்றை இதுநாள்வரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.08 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.04.09.2025.